**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து மாறி காங்கிரஸ் கட்சியில் ஹரிஜனங்கள் சேருகிறார்கள். அப்படிச் சேருகிறவர்களை பலாத்காரப்படுத்தி, பல இடைஞ்சல்களைச் செய்து வருகிறார்கள். அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த மாதிரி நடைபெறுவதாகவும் தகவல் வராமல் இல்லை. அதைப் பற்றியும் போலீசார் கவனம் செலுத்துவார்கள்.

*Mudukulathur school building*

* 101 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be please to state—

(*a*) whether the Government have investigated the reasons for the collapse of the District Board School building in Mudukulathur in Ramanathapuram district in May 1964;

(*b*) if so, the details thereof; and

(*c*) the extent of the damages caused?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The building collapsed due to heavy gale and sharp-showers.

(*c*) Rs. 12,500.

**திரு. செ. மாதவன் :** ஸார், அந்தக் கட்டடம் கட்டி எத்தனை ஆண்டுகள் ஆயிற்று ? பின்னால் இடிந்ததற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எத்தனை ஆண்டுகள் என்று குறிப்பாகத் தகவல் இல்லை. சில ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. பழைய கட்டடம் தான். இந்தக் கட்டடம் தனியாகக் கட்டப்பட்டிருக்கிறது. பக்கத்தில் வேறு கட்டடத்தோடு சேர்ந்து இல்லை. புயல் காற்று அடித்தபோது பலமாக அடித்தது. இந்தக் கட்டடம் அதை எதிர்த்து நிற்க முடியவில்லை.

**திரு. செ. மாதவன் :** ஸார், இந்தக் கட்டடம் இடிந்தபோது அங்கே சிறுவர்கள் இருந்ததாகவும், அவர்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகவும் தகவல் கிடைத்ததா ? அப்படியானால் அவர்களுக்குச் செய்த உதவி என்ன ?

**கனம் திரு. எம்: பக்தவத்சலம் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

**திரு. சா. கணேசன் :** இந்தக் கட்டடம் சிமெண்ட், செங்கல்லால் கட்டப்பட்டதா ? காண்ட்ராக்ட் மூலமாகக் கட்டப்பட்டதா ? அப்படியானால் காண்ட்ராக்டர்களிடமிருந்து எத்தனை நஷ்டஈடு வசூலிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எவ்வாறு கட்டப்பட்டது என்ற தகவல் இல்லை. நான் முன்பே குறிப்பிட்டபடி, கட்டடம் விழுந்ததற்கு முக்கிய காரணம் "ஹை விண்ட் ப்ரெஷர்" தான். கட்டடம் காரணம் அல்ல.

5th February 1966]

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, மதுரை பள்ளிக் கட்டட விபத்து நடந்த பிறகு பள்ளிக் கட்டடங்கள் எந்த அளவில் இருக்கிறது என்பதைப் பற்றிய குறிப்பு வேண்டுமென்று அரசாங்கம் கேட்டிருக்கிறதா? அப்படிக் கேட்ட நேரத்தில் கட்டடம் விழுந்துவிடும் நிலையில் இருக்கிறது என்ற தகவல் வந்ததா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மீண்டும் திருப்பிச் சொல்லு கிறேன். கட்டடத்தில் குற்றம் இல்லை. காற்றின் மீது தான் குற்றம். இதை வைத்துக் கொண்டு மதுரையையெல்லாம் பற்றி சேர்த்துக் கேட்டால் நான் ஒன்றும் கூறுவதற்கில்லை.

*Madurai school tragedy*

* 102. Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the details of the relief granted to the families who lost their children and to the injured children in the Madurai school tragedy; and

(b) whether any action was taken against any officer of the Education Department for granting recognition to such a school?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) (i) A solatium of Rs. 1,000 in cash was paid to each of the families of the deceased children.

(ii) A solatium of Rs. 100 in cash and 5 sets of dresses were given to each of the children injured in the accident.

(iii) Free medical aid and food were given to the injured children. The children were also promoted to higher standards. Officers of the Education Department along with the doctors visited the children discharged from the Hospitals in their houses for check up and they were supplied with Horlicks and fruits.

(b) No.

**திரு. செ. மாதவன் :** ஸார், இந்தப் பள்ளி இடிந்ததற்குப் பின்னாலே நஷ்டஈட்டுத் தொகையைக் கூட பள்ளி உரிமையாளர் கொடுத்திருக்கிறார். பள்ளியில் படித்த மாணவர்கள் தொடர்ந்து படிக்கவும், அங்கே வேலை செய்தவர்களுக்கு வேலை கொடுக்கவும் வேறு ஒருவர் அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்த விண்ணப் பித்தாரா? அது பரிசீலிக்கப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மறுபடியும் அவர்களே திரும்ப நடத்துவதாக முன்வந்தார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்பட வில்லை. நகர மன்றம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக் கிறது. பிள்ளைகளையெல்லாம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களையும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.